### கொளத்தூர் பெரியார் நகர் அரசு மருத்துவமனையில்

# கடந்த ஓராண்டில் 1000 பேருக்கு நவீன ஆஞ்சியோ சிகிச்சை!

## தனியார் மருத்துவமனைகளுக்கு இணையான நவீன வசதிகள்!

சென்னை, மே 28-

சென்னை கொளத்தூரில் அமைந்துள்ள பெரியார் நகர் அரசு மருத்துவமனை இதய இடையீட்டு ஆய்வகத்தில் ஓராண்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆஞ்சியோ பரிசோதனைகளும், சிகிச்சைகளும் அளிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மருத்துவமனையின் கண்காணிப்பாளர் டாக்டர் ஹேமலதா கூறியதாவது:-

கொளத்தூர், பெரம்பூர், வில்லிவாக்கம், வியாசர்பாடி உள்ளிட்ட வடசென்னை பகுதியில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உயர் மருத்துவ சேவைகளை வழங்கும் நோக்கில் மேம்படுத்தப்பட்ட அதிநவீன பெரியார் அரசு பொது மருத்துவமனை, கடந்த 2021இல் புதுப்பிக்கப்பட்டு திறக்கப்பட்டது.

தனியார் மருத்துவமனைகளுக்கு நிகரான ஸ்கேன் பரிசோதனைகள், டயாலிசிஸ் சாதனங்களுடன் 860 படுக்கை வசதிகள் இங்கு அமைந்துள்ளன. நாள் தோறும் 3,100நோயாளிகள் சிகிச்சைக்காக பெரியார் அரசு மருத்துவமனைக்கு வருகின்றனர்.

இந்நிலையில், அதிநவீன இதய இடையீட்டு ஆய்வகம் (கேத் லேப்) கடந்த ஆண்டு மே மாதம் இங்கு தொடங்கப்பட்டது.

ஓராண்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆஞ்சியோ பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, 591 ஆண்களும், 409 பெண்களும் இதன் வாயிலாக பயனடைந்துள்ளனர்.

இதய நாள பாதிப்புகள் மற்றும் அவசர கால மருத்துவ சிகிச்சைகள் தேவைப்பட்டோருக்கு இந்த இடையீட்டு ஆய்வகம் மறுவாழ்வு அளித்துள்ளது.

முதல்வரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு கட்டணமின்றி சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.



சிரிக்கின்ற மல்லிகையின் காதுகளில்
செண்பகம் தான் ஏதோ சேதி தனைச் சொல்ல!

சேர்ந்திருவர் சாமந்தியிடம் ஓடி அவன் செவியில் வாய்
வைத்தார்!! பின்னர்,
மூவருமே முல்லையிடம் முனகிவிட்டு அவளோடு, நால்வருமே
நந்தவனம்
முழுவதும் நடைபோட தொடங்கிவிட்டார், பூமானே!
புகழுக்குன்றே!!

போனாயோ என் தலைவா? கோமானே! கொள்கை வேந்தே!!
உன்னைக்
கொள்ளையிட்ட கூற்றெங்கே? எனையெடுத்து முத்தமீந்து
இதயத்தில் ஏற்றுக்
கொண்டாய் இன்று எனை விடுத்து நீ மட்டும் நெடுந்தொலைவு
போய்விட்டாய்
என்ன நியாயம்! மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீர் கொட்டி
மயங்கிவிடும்
நிலையிலே ரோஜா நின்றாள்!!!

**(இந்தக் கவிதை வரிகள் ஆசியாவின் ஜோதி நேரு பெருமான் அவர்கள் 1964 ஆம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாள் மறைந்த அன்று முத்தமிழ் அறிஞர் - தமிழர்களின் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள நமது கலைஞர் அவர்கள் எழுதிய கவிதாஞ்சலி.)**

# கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயன் வீட்டில் அமலாக்கத் துறை சோதனை!

## எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் நடவடிக்கை – கட்சித் தலைவர்கள் கண்டனம்!

திருவனந்தபுரம்,மே.28-

கேரள மாநில முன்னாள் முதல்வரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான பினராயி விஜயனின் வீடு உள்ளிட்ட 12 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டுள்ளனர். எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் நடவடிக்கை இது என்று பல்வேறு கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

'கொச்சின் மினரல்ஸ் அண்டு ரூடைல் லிமிடெட்' (சிஎம்ஆர்எல்) என்ற கனிம நிறுவனத்துக்கு கேரள அரசு சுரங்க அனுமதி வழங்கியதில் லஞ்சம் பெற்றது, பண மோசடி நடந்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதில் பினராயி விஜயனின் மகள் டி.வீணாவின் 'எக்ஸாலாஜிக்' என்ற ஐடி நிறுவனத்துக்கு நேரடி தொடர்பு இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு வைத்தன.

இந்நிலையில், தற்போது அமலாக்கத் துறை சோதனை மேற்கொண்டுள்ளதாக தெரிகிறது.



சிஎம்ஆர்எல் விவகாரத்தில் அமலாக்கத் துறை விசாரணையை ரத்து செய்ய முடியாது என கேரள உயர் நீதிமன்றம் நேற்று தெரிவித்தது. இந்த வழக்கை சிஎம்ஆர்எல் நிறுவனம் தொடுத்திருந்தது.

இந்நிலையில், நேற்று (மே 27) அமலாக்கத் துறை அதிகாரிகள், முன்னாள் முதல்வர் பினராயி விஜயனின் வீடு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

வீணாவின் கணவரும், முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சருமான பி.ஏ.முகமது ரியாஸ் வீட்டிலும் சோதனை நடைபெற்று வருகிறது. இந்த சோதனையானது திருவனந்தபுரம், கோழிக்கோடு உள்ளிட்ட நகரங்களில் நடைபெறுகிறது.

சி.எம்.ஆர்.எல், நிறுவனத்திடம் இருந்து எக்ஸாலாஜிக் நிறுவனம் ரூ.1.72 கோடியை முறைகேடாக பெற்றதாக வருமான வரி தீர்வு வாரியம் தெரிவித்தது. இதில் வீணா மட்டுமல்லாது அரசு அதிகாரிகள் மீதும் குற்றச் சாட்டு எழுந்ததுள்ளதாக கூறி இந்த சோதனை நடைபெறுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்திற்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் சிறப்புரை!

# காஞ்சிபுரம் மாநகர பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்செல்வன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், மே,28,

காஞ்சிபுரம் மாநகரக் கழகச் செயலாளர் சி.வி.கே. தமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகர கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (28.5.2026 வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் பி.கே.டி.கே. திருமண மண்டபம், கீரை மண்டபத்தில் நடைபெறுகின்றது.

நான் (சி.கே.வி.தமிழ்செல்வன்) வரவேற்புரையாற்றுகிறேன்.

மாநகர அவைத்தலைவர் கே.ஏ.செங்குட்டுவன், தலைமை வகிக்கிறார்.

ஏ.எஸ்.முத்துசெல்வம், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்புராயன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றார்.

இக்கூட்டத்தில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ.சி.வி.எம்.பி.எழிலரசன், மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், சன் பிராண்ட் கே. ஆறுமுகம், நித்யா சுகுமார், எம்.எஸ். சுகுமார், எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், வி.எஸ். ராமகிருஷ்ணன், பெ. சுந்தரவரதன், கே.திலகர், எஸ். சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், எஸ்.சுகுமாரன், எஸ். மாமல்லன் த.விஸ்வநாதன், ஜெ.வரதராஜன், ப. சுரேஷ், பி.சங்கர், எஸ்.சேகர், அ.பாலமுருகன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள். வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர, அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக பொது உறுப்பினர் அனைவரும் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இக் கூட்டத்தில் ஜீன் 03 முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா, கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப் படுகிறது.

இவ்வாறு மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்செல்வன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஜூன் 3: முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்:

# சைதை மேற்கில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

## மா.சுப்பிரமணியன் வழங்குகிறார் – எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில்!

சென்னை, மே.28-

ஜூன் 3: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி கழக செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையில், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன், மின்னல்கந்தப்பன், கலைஇலக்கியப் பகுத்தறிவுப் பேரவை துணை செயலாளர் எம். எஸ்.ஹரிபாபு, பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர். ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம். நாகா, அட்கோகமலநாதன், ஆகியோர் முன்னிலையில் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் உள்ள சைதை மேற்கு பகுதி கழக அலுவலகத்தில் 03.06.2026 (புதன்கிழமை) நண்பகல் 12 மணியளவில், 1000 பேருக்கு அறுசுவை உணவினை சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்.

இந்நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், பால்கார்ரவி, பொன்ஜெய்சிங், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, த.மணி, ஆர்.எல். காந்தன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், ஆர்.கிருஷ்ண குமார், எம்.எஸ்.மணி, ஏ. சந்தோஷ், டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்பந்தம், ஆட்டோதியாகு, கு.கார்த்திகேயன், மாவுமில்ஸ்ரீதர், கேபிள்காளி, தீ.ராஜ்குமார், திடீர்நகர் தாஸ், என்.தீனதயாளன், அ. தமீம்அன்சாரி, வெ. புருஷோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ்குமார், எம். மாறன், கே.பிரபு, பிரஸ் கார்த்திக், வெ.கிஷோர் குமார், ஆர்.துரைராஜ், சிற்றரசு, நரேஷ்குமார், ரவீந்திரகுமார், ஆர்.ஜி.ஸ்டாலின், எம்.ஜி.மதிவாணன், கவிதமிழ்வேல், ஸ்டெல்லா மேரி, செல்வி, ராஜேஸ்வரி, செண்பகம், சுந்தரி, செல்வராணி,

பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் ஜிம் க.பிரபு, ஆர்.எஸ்.ரமேஷ், ஜி.ஜே.மோசஸ், ஆர். ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, கோயில் எஸ்.மணி, ஆட்டோ ஜான், சார்புசரவணன், வைரவமூர்த்தி, இரா. பாபு, பிடிசி.குமார், பூ. பாஸ்கர், த.ஜெயராமன், ஆர்.தனசேகரன், எஸ். கோகுல்குமார், வழக்கறிஞர் மாரியப்பன், விவேக் செல்வம், மருத்துவர்கள் ஆர்.துரைராஜ், ஜீவபிர பாகரன், தகவல் தொழில் நுட்ப அணியின் தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஆர். ரோகேஷ், பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் சி.நிர்மல் குமார், சுரேஷ், எழிலரசி, உள்ளிட்ட வட்டகழக நிர்வாகிகள் அனைத்து அணிகளை சார்ந்த பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், வட்ட ஒருங்கிணைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பெருந்திரளாக பங்கேற்கின்றனர்.

### புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம், பொழிச்சலூரில்

# புரட்சிபாரதம் கட்சியில் இருந்து 50 பேர் விலகல்!

## தா.மோ.அன்பரசன் முன்னிலையில் கழகத்தினர் இணைந்தனர்!

சென்னை, மே.28-

புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம், பொழிச்சலூரில் புரட்சிபாரதம் கட்சியில் இருந்துபொழிச்சலூர் ஆசிம் தலைமையில் 50 பேர் கூண்டோடு விலகி தா.மோ. அன்பரசன் முன்னிலையில் கழகத்தினர் இணைந்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம், பொழிச்சலூர் ஊராட்சியில் உள்ள புரட்சி பாரதம் கட்சியை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர்கள் 50 பேர் அக்கட்சியில் இருந்து விலகி ஆட்டு தொட்டி ஆட்டோ ஓட்டுநர் சங்கத் தலைவர் ஆர்.ஏ.ஆசிம் தலைமையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

பொழிச்சலூர் ஊராட்சியை சேர்ந்த எஸ்.அசோக், பி.சந்திரசேகர். டி.ஸ்ரீதர், என். பரமன் உள்ளிட்ட 10 பேரும், ஆட்டு தொட்டி ஆட்டோ சங்கத்தை சேர்ந்த டி.வெங்கடேசன், ஏ.இதயாதுல்லா உள்ளிட்ட 10 பேரும், பல்லாவரம் மக்ஸ் ஆட்டோ சங்கத்தை சேர்ந்த எஸ்.தண்டபாணி, பி.பால்ராஜ், எஸ்.ஜாகீர்உசேன், அய்யனார், ரத்தினம் உள்ளிட்ட 10 பேரும்,

பம்மல் முத்தமிழ் நகர் ஆட்டோ சங்கத்தை சேர்ந்த எஸ்.விஜயகுமார், ராம்நாத், அப்துல் ரஷீத் உள்ளிட்ட 10 பேரும், பொழிச்சலூர் மூவர் நகர் ஆட்டோ சங்கத்தை சேர்ந்த எம்.சக்தி, ஆர்.பாலாஜி, ஸ்ரீதர் மற்றும் பொழிச்சலூர் விமான் நகரை சேர்ந்த வனராஜா, சுரேஷ், தனபால், சரவண குமார்உள்ளிட்ட 50 பேரும் புரட்சி பாரதம் கட்சியில் இருந்து விலகி தா.மோ. அன்பரசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர்.

மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி, தொ.மு.ச. செயலாளர் இரா. பொன்னுராம், புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், ஒன்றிய துணைச் செயலாளர் செல்வராஜ், பொழிச்சலூர் ஊராட்சி மன்றத் தலைவர் வனஜா தயாளன், துணைத் தலைவர் ஜோசப், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் அன்பு பிரபாகரன் உள்ளிட்டோர் உள்ளனர்.



செம்பாக்கம் வடக்குப் பகுதி செயலாளர் ஏ.கே.கருணாகரன் ஏற்பாட்டில் மாற்றுக்கட்சியை சேர்ந்த 50 பேர் விலகி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அருகில் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி, பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் உள்ளிட்டோர் உள்ளனர்.

### வை.ம.அருள்தாசன் தலைமை! திருவொற்றியூர் மேற்கு பகுதி முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை,மே.28-

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் வழிகாட்டுதலில் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் ஏற்பாட்டில் 240526 ஞாயிற்றுகிழமை மாலை 6:00 மணியளவில் ராமகிருஷ்ணா நகர் 3 வது பிரதான சாலையில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பகுதி கழக நிர்வாகிகள் இ.குமரவேல், யு.எஸ். குறளரசன், எம். வஜ்ரவேல் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள் மு. சிவகுமார் எம்.சி., டி. சேகர் எக்ஸ். எம். சி., ஏ.புண்ணியமூர்த்தி, ந. ராம்குமார், கி.கண்ணன் எக்ஸ். எம்.சி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வீ. தியாகராஜன், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.தினேஷ்குமார், எஸ். கணேஷ், எஸ்.ஆர்.மலைராஜ், மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர்.நவகுமார், தழவை எஸ்.ரஞ்சித், டி. சக்கரவர்த்தி, மாவட்ட விளையாட்டு அணை துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன், வை. சின்னையன், எம்.கார்த்திக், பி.எம்.ஹறி, குருசாமி, இம்மானுவேல், கண்ணன், மோகன், எம்.ராமு, கே.சரவணன், ஆர். நரேன்குமார் மு.பாபு, ம.சுந்தர், பா. அஜித், ஜி.கணேஷ், சாமுண்டீஸ்வரி, முத்துமுருகன், செ.யுவராஜ், வை. சி. பிரபாகரன், எஸ். தினேஷ், சி.கார்த்திக், எஸ்.சதீஷ், உள்ளிட்ட மாவட்ட,பகுதி,வட்டக் கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்ற இக்கூட்டத்தில் ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில் திருவொற்றியூர் மேற்கு பகுதிக்குட்பட்ட அனைத்து வட்டங்களின் கொடிக்கம்பங்களிலும் கழக இருவண்ண

கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.